

வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் அரும்பருதி கிராமம் அருகே பாலாற்றின் குறுக்கே ரூ.24.82 கோடி மதிப்பில் கட்டப்பட்ட தரைகீழ் தடுப்பணையை கழக பொதுச் செயலாளர், நீர் வளம் – சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி ஊராட்சிஒன்றிய குழுத்தலைவர் வேல்முருகன், மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றியகுழு துணை தலைவர் எஸ்.சரவணன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சுலோச்சனா கிருபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### விஜயகுமார் தலைமை! செஞ்சி கிழக்கு ஒன்றியம் ஜம்போதி,ஊரணித்தாங்கல் ஊராட்சியில்

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ புதிய உறுப்பினர் சேர்க்கை!

## பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

*செஞ்சி, ஜுலை 10-*

செஞ்சி கிழக்கு ஒன்றியம் ஜம்போதி,ஊரணித்தாங்கல் ஊராட்சியில் ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்க்கையைவிழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய குழு தலைவர் விஜயகுமார் தலைமையில்

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் செஞ்சி ,மயிலம், திண்டிவனம் ஆகிய தொகுதிகளில் ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்க்கும் பணி நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் செஞ்சி கிழக்கு ஒன்றியம்ஜம்போதி, ஊரணித் தாங்கள் ஆகிய ஊராட்சிகளில் ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணிநடைபெற்று வருகிறது.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமையில் நடைபெற்று வரும் இப்பணிகளை விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு தொடங்கி வைத்தார்.

அப்போது திராவிட மாடல் ஆட்சியின் நான்காண்டு சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்து கூறி நான்காண்டு சாதனை புத்தகங்களை அவர்வழங்கினார்.

அப்போது ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்க்கையின்போது குடும்ப பெண்களுக்கு அப்பாவாக இருந்து மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகையை வழங்கிக் கொண்டிருக்கும் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தான் மீண்டும் தமிழ்நாட்டை ஆள வேண்டும் என பெண்கள் மன மகிழ்ச்சியுடன் கூறி தங்களைஉறுப்பினராக இணைத்துக் கொண்டனர்.

நிகழ்ச்சியில்மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், ஒன்றிய அவைத் தலைவர் வாசு, மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, துணைச் செயலாளர் செல்வமணி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜம்போதி பழனி,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தன்ராஜ்,நிர்வாகிகள் பன்னீர்செல்வம், சங்கர், ரவி பரசுராமன், கோதண்டராமன், ராஜேஷ், சுப்பரமணி ஜம்போதி ஊராட்சி நிர்வாகிகள் ஊராட்சி செயலாளர்கள் கமலக்கண்ணன், சந்திரசேகர், வடிவேல், பார்த்திபன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நாளை

# வீரன் அழகுமுத்துக்கோன் 268 வது பிறந்தநாள் விழா

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

*மதுரை, ஜுலை 10-*

மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாவீரன் அழகுமுத்துக்கோன் 268 வது பிறந்தநாள் விழா வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நாளை (11.07.2025-வெள்ளிக்கிழமை) காலை 6.45 மணிக்கு நடைபெற உள்ளதாக மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் கீழ்க்கண்ட வாறு தெரிவித்துள்ளார், அதன் விபரம்



ஆங்கிலேயருக்கு எதிராக போர் புரிந்த அரசர்களுள் ஒருவரான மாவீரன் அழகு முத்துக்கோன் 268 வது பிறந்தநாள் விழா நாளை (11.07.2025-வெள்ளிக்கிழமை) கொண்டாடப்படுகிறது, அதனை முன்னிட்டு அன்றைய தினம் காலை 6.45 மணிக்கு வடக்கு மாவட்ட கழக அலுவலக வளாகத்தில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கப்பட உள்ளது

இந்த நிகழ்ச்சியில் மதுரை வடக்கு மாவட்ட கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், பிரதிநிதிகள், கழகத்தினர் என அனைவரும் தவறாது பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தனது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2024–2026ஆம் ஆண்டிற்கான உறுதிமொழி குழு தலைவர் / சட்டமன்ற உறுப்பினர் (பண்ருட்டி) . வேல்முருகன் பெரியார் பேருந்து நிலையத்தில் கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும் போக்குவரத்துக்கு இடையூறில்லாமல் பேருந்துகள் செல்ல எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்து பார்வையிட்டார். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் . கே.ஜே.பிரவீன் குமார் மாநகராட்சி ஆணையாளர் த சித்ரா விஜயன் சட்டமன்ற உறுதிமொழி குழு உறுப்பினர்கள் .கோ.தளபதி (மதுரை வடக்கு), எம்.கே. மோகன் (அண்ணா நகர்),.ச.அரவிந்த் ரமேஷ் (சோழிங்கநல்லூர்),.மு.பூமிநாதன் (மதுரை தெற்கு) .இரா.அருள் (சேலம் மேற்கு), ஆகியோர் உடன் உள்ளனர்,



கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா கழக அரசின் நான்காம் ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் இந்திரா நகரில் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் அ.குணசேகரன் தலைமை தாங்கினார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம் .எஸ். கணேஷ் குமார் முன்னிலை வகித்தார். அமைச்சர் சி.வி. கணேசன், சபா .இராஜேந்திரன் எம்.எல்.ஏ, தலைமைக் கழக பேச்சாளர் எழும்பூர் கோபி, இளம் பேச்சாளர் வேல்முருகன் சிறப்புரை யாற்றினர். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.ராஜேஷ், ஆ.சதாம், வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர். சந்தோஷ் குமார் அவைத் தலைவர் வீர இராமச்சந்திரன், இளைஞர் அணி பாக்யராஜ் ,கோபு, இலங்கேஸ்வரன், ராஜதுரை ,ஆனந்த ஜோதி ,ஏழுமலை, இராம .வெங்கடேசன் டாக்டர். ராஜேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழகத்தில் வீடு இல்லாதவர்களுக்கு இலவச பட்டாக்களை வழங்கி கலைஞரின் கனவு இல்லம் மூலம் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் ஆட்சியாக முத்தமிழறிஞர் கலைஞர் வழியில்வந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி உள்ளது என்று ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார். ரெட்டியார் சத்திரம் ஒன்றியம் ஜி.நடுப்பட்டியைச் சேர்ந்த 18 பேருக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கினார்.அருகில் கோட்டாட்சியர் சக்திவேல், வட்டாட்சியர் ஜெயப்பிரகாஷ், ஒன்றிய செயலாளர் மணி உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உ ள்ளனர்.

### நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில்,

# நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக்கூட்டம்!

## அமைச்சர் சி.வெ.கணேசன், சபா.இராசேந்திரன், எம்.எல்.ஏ,பங்கேற்பு!

*கடலூர், ஜுலை 10-*

கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில், செம்மொழி நாயகர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

ஒன்றிய கழக செயலாளர் அ.குணசேகரன் தலைமை தாங்கினார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் முன்னிலை வகித்தார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன், தலைமைக் கழக பேச்சாளர் எழும்பூர் கோபிநாத், இளம் பேச்சாளர் வி. வேல்முருகன் சிறப்புரையாற்றினர். ஒன்றிய அவைத் தலைவர் வீர. இராமச்சந்திரன்,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.ராஜேஷ், ஆ.சதாம், பண்ருட்டி வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.சந்தோஷ்குமார்,

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் பாக்கியராஜ், கோபு, இலங்கேஸ்வரன், ராஜதுரை

பொருளாளர் ஆனந்த ஜோதி, துணைசெயலாளர் ஏழுமலை, மாவட்ட பிரதிநிதி இராமவெங்கடேசன்,

பண்ருட்டி தெற்கு ஒன்றிய துணைசெயலாளர் சுமதி நந்தகோபால், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் ஆர்.இராஜேஷ்,

வழக்கறிஞர் சிலம்பரசன், கோவிந்தராஜ், தகவல் தொழில்நுட்ப அணி ஆனந்தன், தர்மலிங்கம்,

கிளைக் கழக நிர்வாகிகள் கணேசன், சுப்ரமணியன், சுப்பராகவன், வேணுகோபால், வடிவேல், தயாளன், செந்தில்குமார், மணிகண்டன், பிரபு, வினோத்குமார், வசந்த் கிருஷ்ணன், இளங்கோ, சிவசங்கர், அய்யனாரப்பன், கோபால், பாலமுருகன், சையத் வாஜித், சக்திவேல், பழனிவேல், நடராஜன், சந்தானம், சுரேஷ், பூபதி, சிவக்குமார், கல்யாணசுந்தரம், ராமர், ராமநாதன், ஏகாம்பரம், சதாம், கார்த்தி.,உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### ‘ஹஜ்’ பயணம் மேற்கொள்ள விரும்பும்

# முஸ்லிம் பெருமக்களிடமிருந்து விண்ணப்பங்கள்!

## சிறுபான்மையினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் அறிவிப்பு!

*சென்னை, ஜுலை 10-*

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அரசு முதன்மைச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஹஜ் 2026-ல் ஹஜ் பயணம் மேற்கொள்ள விரும்பும் தமிழ்நாட்டைச் சேர்ந்த முஸ்லிம் பெருமக்களிடமிருந்து, மும்பையிலுள்ள இந்திய ஹஜ் குழுவானது ஹஜ் விண்ணப்பங்களைப் பெற தொடங்கியுள்ளது என்பதை தமிழ்நாடு மாநில ஹஜ் குழு அறிவிக்க விரும்புகிறது.

இந்திய ஹஜ் குழு மூலம் ஹஜ் 2026-ற்காக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 07.07.2025 முதல் 31.07.2025 (இரவு 11.59 வரை) முடிய ஆன்லைன் விண்ணப் பத்தை இந்திய ஹஜ் குழு இணையதளம் மூலம் அதாவது https//hajcommittee.gov.in என்ற இணையம் வழியாக (அல்லது) ஐபோன் (அல்லது) ஆண்ட்ராய்டு கைபேசியில் “HAJ SUVIDHA” செயலியினை பதிவிறக்கம் செய்வதன் மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம்.

ஹஜ் 2026-ல் விண்ணப்பதாரர்கள் ஹஜ் விண்ணப்பப் படிவத்தை கட்டணம் ஏதுமின்றி சமர்ப்பிக்கலாம். இயந்திரம் மூலம் படிக்கத் தக்க பாஸ்போர்ட்டின் முதல் மற்றும் கடைசி பக்கம், வெள்ளை நிற பின்னணியுடன் கூடிய சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம், உறைத் தலைவரின் இரத்து செய்யப்பட்ட காசோலை நகல் அல்லது சேமிப்பு வங்கிக் கணக்கு புத்தக நகல் மற்றும் முகவரிச் சான்றின் நகல் ஆகியவற்றை பதிவேற்றம் செய்யவேண்டும். கடந்த ஆண்டைப் போலவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஹஜ் பயணிகள் தங்கள் விருப்பத்தின் வரிசை அடிப்படையில் இரண்டு புறப்பாட்டு தளங்களை தேர்ந்தெடுக்கலாம்.

வாழ்நாளில் ஒருமுறை மட்டும் இந்திய ஹஜ் குழு மூலமாக ஹஜ் பயணத்தை மேற்கொள்ளலாம் என்னும் விதிமுறையை இந்திய ஹஜ் குழு செயற்படுத்தி வருகிறது. குறைந்தபட்சம் 31-12-2026 வரையில் செல்லக்கூடிய இயந்திரம் மூலமாக படிக்கத் தக்க பன்னாட்டு பாஸ்போர்ட்டை விண்ணப்பதாரர்கள் வைத்திருக்க வேண்டும்.

ஹஜ் 2026-ற்கான வழிமுறைகளை இந்திய ஹஜ் குழுவின் இணையதள முகவரி https://hajcommittee.gov.in மூலம் தெரிந்து கொள்ளலாம். 2025-ஆம் ஆண்டு ஹஜ் பயணத்திற்கான “நுசுக் மசார்” போர்ட்டலின்படி பாஸ்கோர்ட்டுக்காக புதிதாக விண்ணப்பிப்பவர்கள் குடும்ப பெயர்/ கடைசி பெயர் ஆகியவற்றை காலியாக விடாமல் கண்டிப்பாக பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்கிற நிபந்தனை உள்ளது.

மேலும், ஹஜ் 2026-ல் புனித ஹஜ் பயணம் மேற்கொள்ள தேர்ந்தெடுக்கப்படும் புனிதப் பயணிகள் நபர் ஒருவருக்கு முதல் தவணைத் தொகையாக ரூ.1.50 இலட்சத்தை செலுத்த தயார் நிலையில் இருப்பதுடன் தங்களிடம் செல்லத்தக்க பாஸ்போர்ட் உள்ளதை உறுதி செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஆன்லைன் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 31.7.2025 ஆகும். மேலும் ஹஜ் பயணிகள் மரணம் அல்லது கடுமையான மருத்துவ நோய் தவிர வேறு காரணத்திற்காக பயணத்தை இரத்து செய்ய நேரிட்டால் அபராதம் விதிக்கப்படும்.

இதனால் விண்ணப்பதாரர்களுக்கு நிதி இழப்பு ஏற்படக்கூடும். எனவே ஹாஜிகள் தங்கள் தயார் நிலை மற்றும் ஹஜ் பயணத்தை மேற்கொள்வதற்கான உறுதிப்பாட்டை கவனமாக பரிசீலித்த பின்னரே விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றியம் ஜம்போதி, ஊரணித்தாங்கல் ஊராட்சியில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ புதிய உறுப்பினர் சேர்க்கையைவிழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் உள்ளிட்ட ஒன்றிய தி.மு.க. நிர்வாகிகள், ஊராட்சி கழக நிர்வாகிகள் உள்ளனர்.